# வெம்பக்கோட்டையில் தொல்பொருள்கள் கண்காட்சி



வெம்பக்கோட்டையில் தொல் பொருள்கள் கண்காட்சியை சனிக்கிழமை தொடங்கி வைத்து பழங்காலப் பொருள்களைப் பார்வையிட்ட அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்.

**சாத்தூர், மே 13:** விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே வெம்பக்கோட்டையில் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல் பொருள்களின் கண்காட்சி சனிக்கிழமை தொடங்கியது.

அகழாய்வு நடைபெறும் வைப்பாற்றின் வடக்கு கரையோரத்தில் நடைபெற்ற கண்காட்சி தொடக்க விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் தலைமை வகித்தார். நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் ஆகியோர் இந்தக் கண்காட்சியைத் தொடங்கி வைத்தனர்.

முதல்கட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தங்க அணிகலன்கள், திமிலுடன் கூடிய காளை உருவம், சுடு களிமண்ணால் ஆன வேலைப்பாடுகளுடன் கூடிய அழகிய குடுவை, சங்கு வளையல்கள், கண்ணாடி மணிகள், யானை தந்தத்தால் செய்யப்பட்ட அணிகலன்கள், சுடுமண்ணால் ஆன தொங்கட்டான், பகடைக்காய், செப்பு நாணயம் உள்ளிட்ட 3,254 பழங்காலப் பொருள்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

விழாவில் அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது: 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தொன்மையான மனிதர்கள் கடல்வழி வாணிபம் செய்தார்கள், கடல் சங்கில் அணிகலங்களை உருவாக்கினார்கள்.

அவர்கள் வெளி மாநிலங்கள், வெளிநாடுகளில் வாணிபம் செய்ததற்கான சான்றுகள் உள்ளன.

கீழடி அகழாய்வுக்கு இணையான முக்கியத்துவம் வாய்ந்ததாக வெம்பக்கோட்டை அகழாய்வு திகழ்கிறது. கற்காலத்துக்கும், நுண்கற்காலத்துக்கும், இரும்பு கற்காலத்துக்கும் இடையேயான தொடர்பை விளக்கும் வகையில், வெம்பக்கோட்டை அகழாய்வு அமைந்துள்ளதால், உலகளாவிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இது உள்ளது என்றார்.

பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் இந்தக் கண்காட்சியைப் பார்வையிட சிறப்பு பேருந்துகள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்தார்.

EVA STALIN IAS ACADEMY

# எண்ம கட்டமைப்பு: எஸ்சிஓ கூட்டத்தில் இந்தியாவின் பரிந்துரை ஒருமனதாக ஏற்பு

**புது தில்லி, மே 13:** ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் (எஸ்சிஓ) கூட்டத்தில் எண்ம கட்டமைப்பு மேம்பாடு தொடர்பான இந்தியாவின் பரிந்துரை ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

எஸ்சிஓ கூட்டமைப்பில் இந்தியா, ரஷியா, சீனா, பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ் குடியரசு ஆகிய 8 நாடுகள் உள்ளன. அக்கூட்டமைப்புக்குத் தற்போது இந்தியா தலைமை வகித்து வருகிறது.

இந்நிலையில், எஸ்சிஓ கூட்டமைப்பு நாடுகளின் தகவல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டம் தில்லியில் சனிக்கிழமை நடைபெற்றது. கூட்டம் குறித்து மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'எண்ம கட்டமைப்பு மேம்பாடு தொடர்பாகக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளில் எண்ம கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்தியா பரிந்துரை வழங்கியது. அந்தப் பரிந்துரையானது ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

யுபிஐ, ஆதார் போன்ற எண்ம கட்டமைப்புகளை இந்தியா வெற்றிகரமாக மேம்படுத்தியுள்ளது. அவை மக்களுக்கு சிறந்த முறையில் சேவைகளை வழங்கி வருகின்றன. அத்தகைய எண்ம சேவைகளின் பலனை பிராந்திய நாடுகளுக்கும் கிடைக்கச் செய்வதில் இந்தியா உறுதி கொண்டுள்ளது.

பிராந்திய நாடுகள் உருவாக்கும் எண்ம கட்டமைப்புகளைப் பரஸ்பரம் பகிர்ந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் அவசியம். நாடுகளுக்கிடையே அத்தகைய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக தனி குழுவை அமைப்பது குறித்து விவாதிக்கப்பட்டது என்றார்.

ஜி20 கூட்டமைப்புக்கும் இந்தியா தலைமைவகித்து வருகிறது. அந்தக் பொறுப்புணர்வின் அடிப்படையில் எண்ம கட்டமைப்பு சார்ந்த விஷயங்களை மற்ற நாடுகளுக்கு எந்தவிதக் கட்டணமுமின்றி வழங்குவதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது. இதன் மூலமாக இந்தியத் தொழில்முனைவோர் பலனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

யுபிஐ தொழில்நுட்பத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக ஏற்கெனவே 10-க்கும் மேற்பட்ட நாடுகளுடன் இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இந்தியாவின் பீம் யுபிஐ செயலியானது ஏற்கெனவே சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், மோரீஷஸ், நேபாளம், பூடான் ஆகிய நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நகரங்களை உருவாக்குவோம்

## அமைச்சர் கே.என்.நேரு உறுதி

**சென்னை, மே 13:** திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத அனைத்து நகரங்களையும் உருவாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு குறும்படங்களை அமைச்சர் நேரு சனிக்கிழமை வெளியிட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நகரங்களைத் தூய்மையாக்குவதற்கும், குப்பையில்லா நகரங்களை உருவாக்குவதற்கும் தூய்மையான மக்கள் இயக்கத்தை 3.6.2022-இல் முதல்வர் தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 4 வகையான தலைப்புகளில் தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வு குறும்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.



திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு குறும்படங்களை தலைமைச் செயலகத்தில் சனிக்கிழமை வெளியிட்ட நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு. உடன், துறை செயலர் சிவ்தாஸ் மீனா, மாநகராட்சி ஆணையர் ககன்தீப்சிங் பேடி, நகராட்சி நிர்வாக இயக்குநர் பா.பொன்னையா, இணை ஆணையர் பி.விஷ்ணுசந்திரன், திரைப்பட தயாரிப்பாளரும் இயக்குநருமான டி.சிவா.

தூய்மை பழக்கவழக்கங்களை நடைமுறைப்படுத்தி, அவற்றை நீடித்து நிலைக்கச் செய்ய தூய்மை இந்தியா திட்டம் 2.0 தொடங்கப்பட்டது. அனைத்து நகரங்களையும் குப்பைகள் இல்லாத நகரங்களாகவும், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகரங்களாகவும் ஆக்குவதே தூய்மை இந்தியா திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நகரங்களாக 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அனைவருக்கும் கழிப்பறைகளை வழங்குவதன் மூலம், அனைத்து நகர்ப்புறங்களையும் தொடர்ந்து திறந்தவெளி மலம் கழிக்காத நகரங்களாக நீடித்து நிலைக்கச் செய்ய அரசு உறுதிபூண்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் நகர்ப்புற உள்ளாட்சிகளில் தேவைக்கேற்ப தனி நபர் வீட்டுக் கழிப்பறைகள், சமுதாயக் கழிப்பறைகள், பொது கழிப்பறைகள், திடக்கழிவு மேலாண்மை வசதிகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை வசதிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.